| STC. No.310/2024 | PW1: திரு. சந்தோஷ் | 21.04.2026 |
|---|---|---|

(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

9. எங்கள் நிறுவனம் சீட்டு நடத்தும் நிறுவனம் என்றால் சரிதான். சீட்டு நிறுவனம் ஏலம் நடத்துவார்கள் என்றால் சரிதான். எந்த இடத்தில் ஏலம் நடத்துவோம் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் ஏலம் நடத்துவோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஏலம் நடத்தியதற்கான வருகைப் பதிவேடு போன்ற ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. எதிரி ஏலத்தில் பங்கு எடுக்கவில்லை என்றாலும், சீட்டு எடுக்கவில்லை என்றாலும் ஏலத்தில் பங்கேற்கவில்லை. ஆனால் சீட்டு பணத்தை முன்பே (Advance) கேட்டு வாங்கிக் கொண்டார். ஏலம் நடத்துவதற்கு முன்பு சந்தாதாரர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை.

11. ஏலத்தில் பங்கு எடுத்து யார் அதிக தொகை கேட்கிறார்களோ அவர்களுக்குத் தான் நாங்கள் சீட்டு பணம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். எதிரி சீட்டில் பங்கு எடுத்ததற்கு என்ன ஆவணம் பராமரிக்கிறோம் என்றால் Pass Book பராமரிக்கிறோம். எதிரியின் Pass

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.21 18:01:44 +0530

Book–யை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எதிரியிடம் தான் இருக்கும்.

12. பொதுவாக ஏலம் எங்கு வைத்து நடத்துவீர்கள் என்றால் சென்னையில் உள்ள எங்களது தலைமை அலுவலகத்தில் வைத்து தான் நடத்துவோம். நாங்கள் இந்த புகாரை தாக்கல் செய்த பிறகும் எங்கள் அலுவலகத்தில் எதிரி பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். எதிரி செலுத்த வேண்டிய பணம் முழுவதையும் செலுத்திவிட்டார் என்றாலும், நாங்கள் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.04.21 18:01:49 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**